KALAKALAPPU
MONTHLY [illegible]OON MAGAZINE

Editor; S. K. THEESAN (I.F.Y.E.)
ஆசிரியர் : எஸ். கே. தீசன்
உதவி : C. S. பாஸ்கர்

ஆகஸ்ட் செப்ரெம் 1970

# கலகலப்பு

சிவனுடன் சில மணிநேரம்

பக்கம் 12

விலை 50 சதம்

நல்லின முந்திரிகைக் கன்றுகளுக்கு

நாடுங்கள்

சாந்தி தோட்டம் இணுவில்



யாழ் ஸ்ரீதரில்

ஹவுஸ் புல் காட்சிகளாக காட்சி தருகிறது

தங்கப் பதக்கம்

175 வது வெள்ளி விழா சித்திரம்

* சிவாஜி
* K. R. விஜயா
* ஸ்ரீகாந்த்
* பிரமிளா
* சுந்தரராஜன்
* V.K. ராமசாமி
* மனோரமா
* சோ

மற்றும் பலர்

நடித்த

வர்ணத் திரையோவியம்

டைரக்ஷன் P. மாதவன்

நகைச்சுவை மாத இதழ்

நான் ம[illegible]கள் பக்கம் திரும்பி பழக்கமில்லை
மற்றவர்களை என்பக்கம் திருப்பித்தான் பழக்கம்

சுங்க அதிகாரி : மிஸ்ரர் ஒரு நிமிசம் இதென்ன கட்டுக் கட்டாக பார்சல்ஸ் ... கள்ளக் கடத்தலா

வெளிநாட்டவர் : இல்லை ... இல்லை ... இதெல்லாம் இலங்கையில் உற்பத்தியாகும் சிறந்த உயர்ந்த கனகலிங்கம் கோல்டன் லைட் சுருட்டுகளே ..

சுங்க அதிகாரி : அப்படியா ... நான் ஒண்டு எடுக்கவா ...

வெளிநாட்டவர் : ஓ யேஸ்...

யாவரும் விரும்புவது :

**கனகலிங்கம் கோல்டன் லைட் சுருட்டுக்கள்**

**கனகலிங்கம்பிள்ளை சுருட்டுக்கள்**
17, சென். ஜோன்ஸ் றோட், கொழும்பு—12
T'P. 25883

நல்லருள் காட்டும்
நல்லூர் முருகா !
சொல்லுரும் சுகத்தை
தினம் தினம் தா! தா!

**ஜெனரல் றேடிங் ஏஜென்சி**
**General Trading Agency**
( கமிஷன் ஏஜென்ட் )
உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்

152 4-ம் குறுக்குத் தெரு, கொழும்பு—11
T'p. 29562

நாட்டின் முதுகெலும்பு
நலம் பெறும் விவசாயி !
ஏட்டின் பொருளறிந்து
என்றும் உதவிடுவோம் !

**கொழும்பு கோப்பரேசன்**
**COLOMBO CORPORATION**
( கமிஷன் ஏஜென்ட் )

அரிசி, சிறுதானியம் உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்

41, பழைய சோனக தெரு, கொழும்பு -12.
T'p 32455

சாந்தி : ஏன்டி... புதுப்புது விதமான பட்டுச் சேலைகள் தினம் தினம் நல்லூருக்கு கட்டி வருகிறாயே ? உன் கணவர் வெளி நாட்டில் இருந்து கொண்டு வந்தவையா ?

வசந்தி: போடி... இதெல்லாம் இங்கேயுள்ள ராசி இன்டஸ்றீசாரின் பட்டுப் புடவைகள் தான் வெளிநாட்டுத் துணிகளைப் போலத்தான் இருக்கின்றன....

சாந்தி: ஓமப்பா...

**ராசி இன்டஸ்றீஸ்**
பட்டு, பருத்தி துணிவகைகள் உற்பத்தியாளர்
துவாய், மற்றும் கைத்தறி உடை வகைகள் தயாரிப்பாளர்கள்
போன் : 895
230, பிரதான வீதி. வத்தேகம.

கொழும்பில் கிடைக்குமிடம் :
**றூப் கலா** 193/3, 2ம் குறுக்குத் தெரு, கொழும்பு - 11.

## ஆசிரியர் பக்கம்



ஒரு முட்டாள் தனது கருத்தை கூறுவதாலோ அன்றி பரப்புவதாலோ பலருக்கு நட்டம் எனவே இம்முறை ஆசிரியர் கருத்தைக் குறைத்துக்கொள்கிறேன்.

— அன்புதீசன்

அற்புதம் அற்புதம்

**சிலிப்பர் புராணம்**

## அங்கு மறைந்தது இங்கு கிடைத்தது

நல்லூர் வீதியில் வெற்றிப் புன்னகையுடன் வந்தார் அவர். காலை இழுத்தி முத்து நடந்தார் காரணம் கேட்டேன்.

தம்பி முனியப்பர் கோவிலில் எனது சிலிப்பர் காணுமல் போயிற்று. இப்போ ஒருசோடி நல்லூரில் கிடைத்தது. ஆனல் சிறிதாகிவிட்டது என்முர்.

ஐயையோ 76 இலும் இப்படி அதிசயம். யாரோ ஆற்றிலிட்டு குளததிலிட்டார் இவர் முனியப்பர் கோவிலடியில் தொலைத்து நல்லூரில் எடுக்கிருரே.

வளர்க பக்தர்கள் தொலைக சிலிப்பர்கள்

வாசகர்களே!

அடுத்த இதழ் தித்திப்பான தீபாவளி இதழ்,

நகைச்சுவை, கதை, கவிதை, கட்டுரை, துணுக்கு முதலியனவற்றை எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும்.

மாணவர்களின் நகைச்சுவை ஆக்கங்களுக்கு முதலிடம் அளிக்கப்படும்.

வர்த்தகப் பெருமக்களே!

அடுத்த இதழ் தீபாவளி சிறப்பிதழாக வெளி வருகிறது தங்கள் ஸ்தாபன விளம்பரம் வெளியிட விரும்பின் உடனே பின்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்க.

20—9—76க்கு முன் தொடர்புகொள்க.

கலகலப்பு
68, சுந்தரபவனம்
இணுவில்.

## வெளியில் சொன்னல் நான் குற்றவாளி தண்டிக்காதீர் தருகிறேன் லஞ்சம்

வைத்திய சாலையில் குழந்தை பிறந்தால்
மனைவியைப் பார்த்திட வாசலில் லஞ்சம்
குழந்தையை சற்று வளமாய் வளர்த்திட
லக்ஸ்பிறே பெற்றிட அதற்கும் லஞ்சம்
குழந்தையின் அறிவைச் சற்றே பெருக்க
கல்லூரி தனிலே புகுந்திட லஞ்சம்
பரீட்சை தனிலே திறம்படசித்தி
பெற்றிட முடியும் அதற்கும் லஞ்சம்
பரீட்சை முடிவு திறம்பட வந்தும்
வேலைக்கே மனு செய்திட லஞ்சம்
ஆசிரியர் தொழில் பெற்றிட முடியும
ஐயாயிரமே அதற்கும் லஞ்சம்
வியாபாரம் ஒன்று செய்திட முனைந்தால்
வர்த்தக லைசென்ஸ் அதற்கும் லஞ்சம்
பொருட்களை வாங்கி விற்றிட வேண்டும்
பர்மிட் பெற்றிட பல்வகை லஞ்சம்
வாக்குப்போட்டே வெற்றியைப் பெற்ற
எம். பியைப் பார்க்க எத்தனை லஞ்சம்
லண்டன் மாப்பிளை என்றே கூறிட
புரோக்கர் தனக்கும் பெருமையாய் லஞ்சம்
வாழ்நாள் முழுதும் காப்பேன் என்று
கன்னியைப் பிடிக்க காளைக்கு லஞ்சம் (சீதனம்)
வாழ்வை வளம்பெற பற்பல வழிகள்
இத்தனை வழிக்கும் வழியே லஞ்சம்
வெளியில் சொன்னல் நான் குற்றவாளி
தண்டிக்காதீர் தருகிறேன் லஞ்சம்

✱ இணுவை-வாலி

## கண்டிக்கு வா காதலிப்போம் டுப்படிதால் பல்லுடைப்பேன்

போன்ற


வெற்றிப் படங்களை நடித்த வெள்ளைவத்தை விசாலாட்சியக்காவின் ஆறுவறு காதலன் கவ்போய் கணவதி துப்பாக்கிச் சூட்டால்

இரு நாட்கள் தவறணைகள் திறக்கப்படவில்லை அவரது ரசிகர்கள் வைத்தியசாலை முன்றலில் பொப்பாடல்கள் பாடி அனுதாபம் தெரிவித்து காதலர் பேரவைக்கு தந்தியொன்று அனுப்பியுள்ளார்.

(தபால் தந்தி வேலை நிறுத்தத்நால் தந்தி செல்லவில்லை)

## வாங்கிய காளையே! ஏனிந்தச் சோலி ? வாலிபச் சேட்டையா ! கட்டிடு வேலி!

❂ இணுவையூர் பாஸ்கர் ❂



இரவும் பகலும் தழுவும் வேளை,
இதயம் மலரும் இனிய மாலை!
குறைவாய் உடைகள் அணிந்த
வாலி,
குமரி படித்து நடந்தாள் நூலை

எதிரில் வந்தான் காளை அங்கு.
எழிலின் சுமையோ இரண்டு
நுங்கு !

பதைக்கும் நெஞ்சில் உணர்வு பொங்க,
பாவை வந்தாள் இதயம் ஏங்க !

நிமிர்ந்த பார்வை அவளை நோக்க,
ஏக்கம் விளைந்தது தவிப்பினைத் தேக்க !
குமைந்த நினைவு குமரியைத் தாக்க,
குடைந்த ஆசை குவிந்தது தூக்க !

ஆசை ஊக்க உள்ளத்தில் பித்தம்,
அணையாய் தடுத்தது அவனது சித்தம் !
மீசையைப் போல ஆசையோ மொத்தம்,
மங்கையை அள்ளியே கொடுத்தான் முத்தம் !

"ஐயோ ! என்னை விடடா !' என்று,
அவளே கத்தினள் தெருவில் நின்று !
"நாயே !' என்று கேட்டு நன்கு,
நாலு கொடுத்தாள் நங்கை அங்கு !

குவிந்த கூட்டம் கொடுத்தது மேலும்,
கட்டை ஒன்றால் முறைந்தது காலும் !
தவியாய் தவித்த காளைக்கு வேணும்,
தாவும் மனது இருக்குமோ நாளும் ?

"என்ன கூட்டம் ?" பார்த்தேன் எட்டி.
எந்தன் நாடகப் பையனே குட்டி !
அன்று பெண்ணாய் வேசம் கட்டி.
அங்கு வந்தவள், அவனே சுட்டி !

கண்டதும் அவளைக் கொண்டான் காதல்,
கட்டி அணைத்தான் வந்தது மோதல் !
கண்டறியாத அவசரக் காதல்,
கடைசியில் அவனுக்கு தந்தது சாதல் !

தொங்கிய ஆசை தந்ததோ போலி !
பொதுமக்கள் தெருவினில் பேசினர் கேலி !
வாங்கிய காளையே ! ஏனிந்தச் சோலி ?
வாலிபச சேட்டையா ! கட்டிடு வேலி !

ஆசையை அடக்குதல் அவனியில் நன்று ;
ஆடவர் ஆசையை தடுப்பது என்று ?
மீசையைப் போல ஆசையை இன்று,
மீதமாய் கொண்டு திரிந்திடல் நன்றோ ?

## உங்கள் பிரச்சினைக்கு இதோ எங்கள் ஆலோசனைகள் !



❂ உங்கள் தலையில் உள்ள மயிர் உதிருகிறதா ?

✳ உடனடியாக அருகில் உள்ள சலூனுக்கு ஓடிச்சென்று மொட்டை அடித்துக் கொள்ளுங்கள், பின்பு உதிராது !

❂ நீங்கள் படுக்கும் படுக்கையில் மூட்டை கடியால் தொல்லைப்படுகிறீர்களா ?

✳ வேறு படுக்கையில் இனி படுத்துக் கொள்ளுங்கள் !

❂ நீங்கள் தைத்த ரைட்ஸ் சேர்ட் போட்ட பின்பு இறுக்குகிறதே எனக் கவலைபபடுகிறீர்களா ?

✳ கவலையை விடுங்கள், அந்த உடையை அணியாதீர்கள் !

❂ இரவில் பயங்கர கனவு கண்டு, பயந்து சத்தமிடுகிறீர்களா ?

✳ இரவில் நித்திரை கொள்வதை தவிர்க்கவும்

❂ வேளா வேளைக்குப் பசிக்கின்றதா ?

✳ பசி உணர்வே ஏற்படாதிருக்க அடிக்கடி ஏதாவதை உண்டு தொலையுங்கள் !

❂ பெற்றோர்களே ! பிள்ளைகளைப் பெற்றுப் பிரயோசனம் இல்லையே என வருந்துகிறீர்களா ?

✳ இனிமேல் பெறாதீர்கள் !

❂ பரீட்சையில் சித்தியடையவில்லையே என துயருறுகிறீர்களா ?

✳ இனிப் பரீட்சைக்குத் தேயாருதீர்கள் !

❂ சிறுவர்களே ! இரவில் தனியப் போகப் பயப்படுகிறீர்களா ?

✳ அஞ்சாதீர்கள் ! தனியப் போவதை நிறுத்துங்கள் !

— ஜே பி. & டோ —

சிந்தை மகிழ, சித்திரத் தேரில்
வந்தருள் புரிவாய் வடிவேலா !
உந்தன் அருளை நாடி இன்று,
சிந்தை தவிக்கிறது சீரழகா !

உள்ளூர் விளை பொருட்களை உயர்ந்த விலையில் விற்றிட உங்களை அழைக்கிறோர்கள் !

★ மாரியப்பா அன் கோ., ★

(கமிஷன் ஏஜன்ட்)

44,46,4-ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

போன் : 2436ç

# பல்சுவை தரும் பத்திரிகைச் செய்திகள்



டோ

❂ இலங்கரத்தினு செல்வா சந்தித்து பேசினுர்கள்

இருவல்லவர்கள்

❂ சுவரொட்டி போராட்டம் அமைதியாக நடைபெற்றது.

எல்லோரும் நல்லவரே

❂ இளேஞர்கள் விடுதலேக்காக அச்சுவேலியில் காவடி

தெய்வமே துணே

❂ அவசர காலச் சட்டம் செல்லுபடியாகாது.

நல்ல தீர்ப்பு

❂ ஏழை மாணவர்களுக்கு இலவச சீசன் ரிக்கற் வழங்குக. — க. பொ. இரத்தினம்

வழிகாட்டி

❂ M. G. R. சிவாஜி மோதல் கொலே எதிரிக்கு 5 வருட சிறை.

அனுபவி ராஜா அனுபவி

❂ ஜனுதிபதி பிரதமர் பதவிக்கு நாம் பேராடவில்லே.
உடுவில் எம். பி.

தெய்வ மகன்

❂ பிரதமர் யாழ் விஜயம் தான் துரையப்பா மீது பொருமை வளர்த்தது. — அருளம்பலம் எம், பி.

நீங்காத நினேவு

❂ அரசியல் சட்டம் வெறும் கடதாசிக்கு சமன்.
— திருச்செல்வம்

சபாஸ் தம்பி

❂ பாகிஸ்தான் பிரிந்தநிலே இங்கும் உருவாகிறது.

பாகப் பிரிவினே

❂ இலங்கை மத்திய வங்கியில் தமிழ் புறக்கணிப்பு

எங்களுக்கும் காலம் வரும்

❂ வெள்ளே மாளிகையில் புகுந்த நீக்ரோ படுகொலே

அவனும் மனிதன் தான்

❂ வானெலி நிலேயத்தில் சதி! நிகழ்ச்சிகள் தடைப்பட்டது!

ஏன் !

❂ தமிழ் மக்கள் பிரச்சினே தீர்க்க பிரதமர் அக்கறை
—அருளமபலம் எம். பி.

பெண்ணுக்குத் தங்க மனசு

❂ தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினே தீர்த்து வைக்காமல் சகல கட்சிகளும் தமிழ் மக்களே தவருன பாதையில் எடுத்து சென்றுள்ளன.
—அனுரா

அறிவாளி

❂ சகல பிரச்சினேகளேயும் தீர்க்க கூடியவர் ஜே. ஆர். தான்.

வா ராஜா வா

❂ நாம் ஆட்சிக்கு வந்தால் தமிழர் பிரச்சினேக்கு முற்றுப்புள்ளி —N. M.

வாக்குறுதி

❂ என் வாழ் நாளுக்குள் தமிழர் விடுதலே பெற முயற்சிப்பேன். —செல்வா—

நினேத்ததை முடிப்பவன்

❂ தமிழர் விடுதலேயுணர்வை அடக்கிவிட முடியாது

நூற்றுக்கு நூறு

❂ விவசாய விழாவில் இளம் விவசாயி வெளியேற்றப்பட்டார்.

நினேத்ததை முடிப்பவன்

❂ ஆசிரியர் வேலே பெற்றுத்தருவதாக 1500 ரூபா லஞ்சம் வாங்கிஞராம்

குரு தட்சணே

❂ காதலன் சினிமாவிற்கு அழைக்கவில்லே காதலி தற்கொலே

ரோஷக்காரி

❂ இளம் விவசாய வளர்ச்சி பாராட்டுதற்குரியது.

கிளிநொச்சியில் ஒன்றிய தலேவர் தீசன்

★ நூற்றுக்குநூறு ★

## தைப்பாவை!

(கவிதைத் தொகுப்பில் இருந்து......)

தாயும் கடன் பாட்டாள்
தந்தையவன் உடன்பட்டான்
யானும் உயிர்பெற்றேன்
யாக்கையெனும் வடிவுற்றேன்
சேயின் நிலே பெற்றேன்
தினம் தினமும் வளர்ந்திட்டேன்;
ஆயுங் கலே கற்றேன்
ஆசை யெனும் வலேப்பட்டேன்;
தோயும் மனேபெற்றென்.
சுழலவரும் மயக்குற்றேன்
நேயர் பலருற்றேன்
நினேவை யெலாம் அவர்க்கிட்டேன்;
யாவும் செழிப் புற்றே
அருள் வழியச் செய்வாயால்
வாயில் திறந்திட்டேன்,
வந்தருள் செய் தைப்பாய்;

(கவியரசு சு. கண்ணதாசன்)

பக்திய ல் பணிந்தேன் பரமன் குமரா
முக்தியைக் காட்டி மேன்மையைத் தருவாய்!

பாவனேக்கு உறுதியான
அலுமீனிய கண்ணுடிப் பாத்திர வகைகள்

❂ தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

ரீ. எஸ். ரீ. பி. ரீ. அன் கோ.

T. S. T. P. T. & Co.

49, டாம் வீதி, கொழும்பு—11

தொலேபேசி: 31035

★ ஒரு முள் குத்திய அனுபவம் கடலளவு எச்சரிக்கைக்குச் சமன் ★

# ஆச்சிக்குட்டிக்கு வாச்ச மாப்பிள்ளை

C. S. பாஸ்கர்

காட்சி: 2

ஆறுமுகத்தார் வீட்டின் முகப்பில், கீழே குந்தி இருந்து கொண்டு இறைவனைத் தியானித்து தீட்சைக் குறிகளை வைத்த வண்ணம் தனக்குள் பேசிக்கொள்கிறார்.

ஆறு: வடிவேலா! எங்கையிருந்துதான் இந்தச் சனம் விழைஞ்சுதோ தெரியல்லை, நல்லூரிலை ஏகப்பட்ட சனம், எல்லாரும் கும்பிடவே வருகினம், விடுப்புப் பாக்கிறவை, கடலை வாங்கிறவை, காதலிக்கிறவை அந்த நேரம் நானும் ஆச்சிக்குட்டியைப பாக்கிறதுக்கெண்டு தேருக்குப் போய் காத்திருந்தனான்தான். காதலெண்டால் சும்மாவே? எவ்வளவு அலைச்சல்! உலைச்சல்! போனவருசம் தேருக்குப போய் சனத்துக்கை இடிபட்டு தேர் பாச்கேக்கை என்ரை வேட்டியை யாரோ அவிட்டுக் கொண்டு போட்டாங்கள்! என்ரை மனிசி ஆச்சிக்குட்டியின்ரை கொண்டையிலை கனகாம்பர மாலை இருக்கத்தக்கனியா முடிமயிரை ஆரோ கழட்டிப்போட்டாளவை! என்ரை மனிசி நானெண்டு விட்டு ஆரோ ஒருத்தனுக்குப் பின்னலை போட்டாள்! நான் பெண்டுகளிட்டை மாட்டுப்பட்டுப் போனன். ஒரு பெட்டை இடிச்ச இடியிலை ஒரு பக்க விலா எலும்பைக் காணேல்லை, எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தும் கண்டுபிடிக்கேலாமல் போச்சு அப்பிடியே நொருங்கிப்போச்சாம்... சிவசிவா! கார்த்திகேயா!



[இலண்டனில் இருந்து பை, பெட்டிகள் சகிதம் மாப்பிள்ளை வந்து நின்று]

மாப்: ''இஸ் , உஸ் , ஸ் .. ஏய்... ஏய்''

ஆறு: [திடுக்கிட்டுத் திரும்பி] ஏயோ, ஏன் நான் என்ன நாலு காலிலேயே நிக்கிறன்... ஆடு மாடு ஏதேன் எண்டு என்னை நினைச்சீரோ ஏயாம்

மாப்: சொறி (Sorry) எக்ஸ் கியூஸ் மி (Exucuse me) இதுதான் மிஸ்ரர் ஆறுமுகத்தின்ரை வீடா?

ஆறு: பின்னை என்ன? உம்முடைய வீடோ என்ன விசயம்? இப்பதான் போன கிழமை திருத்தி, பூச்சுக்கீச்சு அடிப்பிச்சனான்.. ஆயிரத்துக்குமேலை முடிஞ்சுது

மாப்: இஸ் இற்? (Is it?) ஐ வான் ரு மீற் மிஸ்ரர் ஆறுமுகம் .(I want to meet Mr. Arumugam)

ஆறு: நாசமாய்ப் போச்சு! உந்தக் காச்சுப் பூச்சொண்டும் எனக்கு விளங்காது .. தமிழிலை கக்கு! தனித் தமிழிலை கக்கு!

மாப். எனக்கு மிஸ்டர் ஆறுமுகத்தைப் பார்கக வேணும் அவரை உங்களுக்கு தெரியுமா?

ஆறு; மிஸ்டர் ஆறுமுகம் எண்ட பேரிலை ஒருத்தரும் இந்தப்பக்கத்திலை இல்லை. நன்னிக்குட்டி ஆறுமுகம் எண்டால் ..

மாப்: ஆ! என் (N) ஆறுமுகம், ஓ அவர்தான் பெரிய சுருட்டு வியாபாரி பிஸினஸ் மன் தெரியுமா?

ஆறு: ஏன் கடன் கிடன் கேட்கப்போறியே?

மாப்: இல்லை, நோ, நோ அவர் என் அங்கிள் (Uncle) மாமா! மாமா!

ஆறு: உன்ரை மாமாவோ? என்ன விளையாடுறியே? நான்தான் ஆறுமுகம்!

மாப்! ஓ! (Oh) நீங்களா? அங்கிள் குட் மோர்ணிங் (Uncle, Good morning)

ஆறு: பரவாயில்லை நீ சொல்லுறதைச் சொல்லு என்ன விசயம்!

மாப்: அங்கிள் கிளாட் டு மீற் யூ (Uncle Glad to meet you) ஆறுமுகத்தாரின் கையைப் பிடித்து பலமாக குலுக்குகின்றான்,

ஆறு: இதென்ன கரைச்சலாக கிடக்கு தம்பி என்ரை கையைச் சுழுக்கெடுக்கவே வந்தனீ. யாரப்பா நீ கை கால் திருத்திற மெகானிக்கரே?

மாப்: நான் தான் சம்பந்தன், லண்டனில் இருந்து நேற்றைக்குத்தான் சிலோனுக்கு வந்தனான். நேற்று நைற் மெயில் (Night Train) எடுத்து இப்பதான் ஸ்ரேசனிலை இருந்து வாறன்.

ஆறு: என்ன இலண்டனிலை இருந்தோ? எந்த லண்டன் சீமை லண்டன்தானே பஞ்சலிங்கத்தின்ரை மேனே... கொஞ்சம் பொறும் பொறும்

[கிட்டப்போய் ஏற இறங்கப் பார்த்து மோப்பம் பார்த்துவிட்டு]

ஓ. ஓ லண்டன்தான்! லண்டன்தான்!

[சால்வையை எடுத்து உதறி இடுப்பிலை கட்டிக் கொண்டே உள்ளே பார்த்து] இஞ்சாரும், ஆச்சிக் குட்டி! ஆச்சிக்குட்டி! (சத்தமிட்டு அழைத்தல்)

மாப்ா அங்கிள் ஆட்டுக்குட்டியும் வளர்க்கிறீங்களா?

ஆறு: சாச்சாய், அது ஆட்டுக்குட்டி இல்லைத் தம்பி ஆச்சிக்குட்டி, ஆச்சிக்குட்டி ஆச்சிக்குட்டி இஞ்சாரும் இஞ்சை வந்து பாரும் ஆர் வந்திருக்கிறதெண்டு. தம்பி வந்திட்டார்! லண்டன் தம்பி வந்திட்டார்! உண்ணாணை வந்திட்டார்.

ஆ.குட்டி: (உள்ளிருந்து) வந்திட்டாரோ, வாறன் வாறன்,

ஆறு: வரேக்கை நான் வாங்கித்தந்த சிவப்புச் சீலையைக் கட்டிக்கொண்டு வாரும். என்ன அந்தச் சிவப்புச் சீலையைக் கட்டும்' விளங்கிச்சுதே அதுதான் உமக்கு வடிவு. பிள்ளைக்கும் அந்தக் குறைச் சட்டையை ஞாபகப்படுத்தி விடும். வரேக்கை என்ரை புதுச் சேட்டையும் எடுத்துக் கொண்டு வாரும்

மாப்; ஆர் அந்தக் குட்டி?

ஆறு: அது வெறும் குட்டி இல்லை. என்ரை குட்டி ஆச்சிக்குட்டி. என்ரை அவ ஓ மனிசி.

மாப்: ஓ ஓ வைவ வா? (Wife)

ஆறு: வைப்போ அவள் சேட்டால் கொண்டுபோடுவள் சாச்சாய் அது என்ரை மனிசி.

✤ காதலென்பது உதட்டிலல்ல உள்ளத்தின் பள்ளத்திலிருந்து வருவதுதான்? ✤

மாப்: ஓ Oh, Mrs மிஸஸ் தானே?

ஆறு: ஓ அந்த இழவு தானுக்கும்!
அதுசரி அடுத்த கிழமை மட்டிலை வாறதெண்டு எழுதினியள், சொல்லாமல் கொள்ளாமல் இப்பவே வந்திட்டியள இன்னும் முன் வேலியே அடைக்கேல்லை, ஒருவேளை பிளேனை இறுக்கி ஓட்டி வந்திட்டானே அந்தப் பிளேன்காரன். உவன்கள் உப்பிடித்தான், கண் மண் தெரியாமல் ஓட்டுவங்கள்.

[ஆச்சிக்குட்டி உடுத்துக்கொண்டு சேட்டுடன் வரல்]

ஆறு: இஞ்சை வாருமப்பா! வாரும்! இதுதான் லண்டன் தம்பி! தம்பி! இவதான் என்ரை அவ! ஆச்சிக்குட்டி, இஞ்சினியர்த் தம்பி எப்படி?

ஆ.குட்டி; தம்பி, நல்லா மெலிஞ்சு போனியள்!

ஆறு: மெலிஞ்சு போனியளோ! சும்மா கிட! ஏதோ முந்தி கண்டமாதிரி சொல்லுறுய்.

மாப்: அங்கிள்,

ஆறு: [நெளிந்து வளைந்தவாறே] என்ன லண்டன் தம்பி?

மாப்: உங்களுக்கு சில்றன் (Children) இல்லையே?

ஆறு: சாச்சாய்! அப்பிடி ஒண்டும் எனக்கில்லை, இப்பவும் திடகாத்திரமாக இருக்கிறன், இப்ப எனக்கு அறுபத்தைஞ்சு வயதாகிது, ஆரேன் சொல்லி வினமே. அப்பிடி இப்பிடிக் கூட்டிக் குறைச்சுப் பாத்தாலும் அம்பதுக்கு மேலை மதிக்காயினம்.. அதுக்கு என்ன காரணம் தெரியுமே? அந்த நேரம் எனக்கு என்ரை ஆச்சி தந்த சாப்பாடுதான்! ஒடியல் கூழும், குரக்கன் புட்டும், மரவள்ளிக் கிழங்கும். இப்ப இவள் ஆச்சிக்குட்டி அங்கினேக்கை சின்னக் கிழிக்குஞ்சைப்போட்டு ஒரு குழம்பும், கீரைக் கறியையும் காச்சித் தந்து பேய்க்காட்டி விட்டிடுவள் ஒருவேளை இனித்தான் நீங்கள் இப்ப இங்கிலீசிலை சொன்ன நோய் வருகுதோ தெரியேல்லை?

மாப்: சில்றன் (Children) என்றுல் நோய் இல்லை அங்கிள்! குழந்தைகள் உங்களுக்கு குழந்தைகள் இல்லையா?

ஆறு: ஏன் இல்லை .நூற்றி எழுபத்தைஞ்சு இருத்தலிலை ஒன்டும் .. ஏழரைக் குறைமாசத்திலை அவசரமாப் பிறந்த இன்னொண்டும் புத்திர பாக்கியங்களாக இருக்கிதுகள். [தொடரும்]

என் தலைவிதி

## ஒன்றைச் சுழட்ட வேறொன்று வருகிறது

என் நண்பனொருவருக்கு செய்தியொன்றை அவசரம் அனுப்புதற்காக அரியாலை தபாற் கந்தோருக்கு ரெலிபோனைச் சுழற்றினேன், நல்லூரிலிருந்து பதில் கிடைத்தது. திரும்ப பதில் தந்தவரின் உதவியுடன் இலக்கம் அறிந்து சுழற்றினேன் (ரெலிபோன் நம்பர்) பின்னர்தான் சரியானவருடன் தொடர்பு கொள்ள முடிந்தது. தபால் தந்தி இலாகாவின் தவறு, நான் செலுத்தியது இரட்டைக் கட்டணம். இப்போது நான் சுழட்டும்போது கவனித்துத்தான் சுழட்டுகிறேன். (ரெலிபோனை)

நீராவியடி தபாற் கந்தோரில்நின்று சுழட்டிபவர்.

—டோ—

திருமண விழாவில்....

மணமகனின் நண்பன்

டேய் என்னடா, நீ பெரிய டாக்டராக இருந்தும் எவ்வளவோ சீதனம் பெற்றும் வருகிறவர்களெல்லாம் பெண்ணையே பார்க்கிறூர்களே!

மணமகன்:

அப்படியொன்றும் புதுமையில்லை. திருமணத்தின் முன் வாமனன் ரெக்ஸ்ரையிலில் சென்று சிறந்த கூறையை வாங்கிக் கொடுத்தேன். அதுதான் எல்லோரும் அவளின் கூறைச் சேலையையே பார்க்கின்றனர்.


☆ 'வாமனன் ரெக்ரைல்ஸ்' ☆

தரமான கூறை வகைகள் புடவைத் தினுசுகள் விற்பனையாளர்.

174, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

காலத்திற்கேற்ப, நவநாகரீக

பாட்டா பாதணிகள்



வடமாகாண மொத்த விற்பனையாளர்கள்

☆ சிற்றி சூ பலஸ் ☆

City Shoe Palace

ரெலிபோன்: 7548

5, 7, பள்ளிவாசல் ஒழுங்கை,

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

(பாட்டா பாதணிகள்)

வவுனியா. மன்னர், அநுராதபுரம்.

திருகோணமலை, புத்தளம், குருனுகலை.

தலைமை அலுவலகம்:

சிற்றி சூ பலஸ்

124, பிரின்ஸ் வீதி, கொழும்பு-11

தொலைபேசி: 20258

## எல்லாம் எதற்காக

சிரிக்காத பேருக்குப் பல் லெதற்கு?
சிரிக்காத பேருக்கு முக மெதற்கு?
கொடுக்காத கஞ்சார்க்குக் கை யெதற்கு?
குதிக்காத குரங்குக்கு மர மெதற்கு?
கொத்தாத கிளிகட்குப் பழ மெதற்கு?
குலவாத பேடிக்குப் பெண் ணெதற்கு?
மலராத முல்லைக்குக் கொம் பெதற்கு?
மானமிலா கோழைக்கு வா ளெதற்கு?
பஞ்சத்தைத் தீராத பயிர் எதற்கு?
நெஞ்சுரம் இல்லாத ஆண் எதற்கு?
கொஞ்சாத அன்னைக்குச் சே யெதற்கு?
கொள்கை யிலாதார்க்குக் கொடி யெதற்கு?
திறக்காத பெட்டியில் பண மெதற்கு?
கறக்காத மாட்டுக்குக் கன் றெதற்கு?
சிறக்காத கருத்தற்ற கவி எதற்கு?
சுதந்திரம் இல்லாத நா டெதற்கு?
செரிக்காத வயிற்றுக்குச் சோ றெதற்கு?
சொறியாத மூடர்க்குச் சிரங் கெதற்கு?
முளைக்காத பதருக்கு உர மெதற்கு?
சுரக்காத அன்புக்கு உயி ரெதற்கு?
ஆடாத மயிலுக்கு அழ கெதற்கு?
பாடாத குயிலுக்குக் குரல் எதற்கு?
ருசிக்காத வாயுக்கு விருந்தெதற்கு?
ரசிக்காத பேருக்குக் கவி யெதற்கு?
கட்டாத இடுப்புக்குப் பட் டெதற்கு?
கல்லாத பேருக்குக் கலை யெதற்கு?
எட்டாத பழத்துக்கு ருசி யெதற்கு?
எடுக்காத புடவையின் விலை எதற்கு?
வெடிக்காத பட்டாசுக் கட் டெதற்கு?
வெல்லாத தேர்தலில் செல வெதற்கு?
இடிக்காத கோடையிடி மழை யெதற்கு?
இதயத்தில் வீணகப் பயம் எதற்கு?

ஆதாரம் : மில்க்வைற் செய்திகள்

## பெண்ணே நீ வாழ்க

ராஜீ : கமலம்! உனக்குத் தெரியுமே அமெரிக்கன் விட்ட கலமோ என்னவோ, செவ்வாய்க் கிரகத்திலை இறங்கி விட்டுதாம்!

கமலம் : அப்பிடியே! அப்ப இந்த ஏழுச் செவ்வாய்ப் பெட்டையளுக்கும் ஏதேன் செய்வங்கள்!

❁ வேலணை விஜி ❁
(உதயச் செவ்வாய்)

எங்கும், என்றும்
பொங்கும் மணம் கமழ!

பொபி பத்திகள்

தயாரிப்பாளர்கள் :
நத்தாரம் பொதததை, குண்டசாலை.

கலியுகத்தில்

## காலம் மாறினால் இப்படியும் செய்திகள்!

காவடி எடுக்கச் சென்ற பக்தர் ஒருவரை கம்பிகளை வாயிலும், முதுகிலும் குத்தி கொலை செய்ய முயன்றதாக பிரபல செதில் குத்துக்காரர் சரவணை பொலிசாரால் கைது செய்யப்பட்டார். அவர் நேர்த்திக் கடன் என்று சொல்லியும் பொலிசார் நம்ப மறுத்து அவரை புலன் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். கொலை செய்யப்பட வேண்டியவர் பேசாதவாறு வாயினூடாக கம்பி செருகப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. சம்பவத்தை நேரில் கண்டவர்கள் சிலரை பொலீசார் அழைத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது. அவர் பாவித்த ஆயுதங்களும் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

சென்ற வருடம் கொழும்பில் நடைபெற்ற ஆடிவேலின்போது உருவாடிக்கொண்ட கனகா பார்வதி இனம் தெரியாத சிலரால் கடத்திச் செல்லப்பட்டார் என்பது வாசகர்கள் அறிந்ததே. அவரை இவவருட நல்லூர்த் திருவிழாவின் போது பொலிசார் கைது செய்தனர். அவர் அளித்த வாக்குமூலங்கள் பொலிசாரை திகைக்கச் செய்தனவாம். தனது உரு ஆட்டத்தை ரெலிவிசனில் போட்டுக் காட்டவே வெள்ளைக்காரர் சிலர் அழைத்துச் சென்றதாகவும், தனக்கு எதுவித இடையூறும் விளைவிக்கவில்லையெனவும் குறிப்பிட்டாராம். தனது உபவாசத்துக்காகவே இங்கு கூட்டி வந்ததாகவும் தான் மீண்டும் செல்ல இருப்பதாக குறிப்பிட்டார். அவருடைய கணவன் ஏற்கனவே இவரை விவாகரத்து செய்துவிட்டார். (அவர் ஆங்கிலத்திலே வாக்குமூலமளித்தார்.)


நெல்லியடியைச் சேர்ந்த ரமேஷ் சகுந்தலா தனது கணவனை பத்தாம் நாள் திருவிழாவின்போது தவற விட்டதாக முறைப்பாடு செய்துள்ளார். காணுமல்போன அன்று மஞ்சள் நிற எலிபன்ட் பெல்சும் சிவப்பு நிற சேட்டும் அணிந்திருந்தாராம். அவர் தலைமுடியை மிக நீளமாக வளர்த்திருந்தபடியால் சிலர் அவரை பெண் என நினைத்து கடத்திச் சென்றிருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

பால் செம்பை யார் காவுவது என்பதில் ஏற்பட்ட போட்டியில் காதலி நிர்மலா காதலனின் தாயாரால் தாக்கப்பட்டு பொலிசாரால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்... காதலன் தனது தாய்மீதுள்ள வெறுப்பை காட்டுவதற்காக உண்ணுவிரதத்தில் ஈடுபட்டிருப்பதாகவும், மகனின் பாசத்தால் தாய் காதலியை ஆஸ்பத்திரியில் சென்று பார்த்தாராம். அவர் குணமடைந்ததும் தன் மகனுக்கே விவாகம் செய்துவைக்கும் எண்ணமிருப்பதாக நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

— க. தர்மலிங்கம் —
(கோண்டாவில்)

✱ அதிஸ்டம் சிலரை மகிழ வைக்கிறது சிலரை சிதைத்து அழ வைக்கிறது ✱

# உங்கள் கேள்விகளும் உதவாத பதில்களும்



★ தீசன்

சிற். ஸ்ரீ ஜீவா கொக்குவில் மேற்கு

✳ காதலுக்கு ஆணு பெண்ணு காரணம்?

ஆண் பெண் இருவரினதும் அறிவுகெட்டதனம் தான் காரணம்

எஸ். கே. ராஜீ கல்லாரை, மல்லாகம்

✳ நம்மை அதிகமாக ஏமாற்றுவது யார்? நடிகரா? அரசியல் வாதியா?

அரசியல் நடிகர்கள்

மு. சுந்தசாமி நவிண்டல் கரவெட்டி

✳ அந்தக்கால அரசியல் உணர்ச்சிக்கும், இந்தக் கால அரசியல் உணர்ச்சிக்கும் உள்ள வேறுபாடு என்ன?

அக்கால அரசியல் வாதிக்கு மதிப்பு. இப்போ அவர்களின் கையாட்களுக்கு அதைவிட வதிப்பு

M. தாசன் அரியாலை (யாழ்)

✳ தீசனுரே நீங்கள் உங்கள் காதலியிடம் எதிர் பார்ப்பது எது?

உள்ளக்காதலை மட்டும்தான் (நிச்சயமாக சீதனம் அல்ல)

க. பிலேந்திரன் 27, பீச்ரோட், நாவாந்துறை

✳ மனிதனுக்கு இருதயத்தை ஏன் இடப்பக்கத்தில் படைத்தான் இறைவன்?

தம்பி பிலேந்திரா இடமோ வலமோ இருக்கென் பதை நீர் ஒத்துக்கொள்கிறீர். சிலருக்கு ஒரு பக்கத்திலும் இருதயம் இல்லையே. இது உமக்குத் தெரியாதா?

அ. அனஸ் 36/7, கக்கியா வீதி, திருமலை

✳ படித்தவர் அறிஞர் ஆனல், படிக்காதவர்?

M. P. ஆவார்.

பாலன் சிவானந்தன் உரும்பிராய் தெற்கு

✳ நாயின் நன்றிங்குணம் மனிதனுக்கும் வந்துவிட்டால்

சும்மா வாலாட்டுகிறவர்கள் பின்பு கண்டபடி வாலாட்டுவார்கள்.

செல்வி சுப்பையா விஜயலட்சுமி தாவடி

✳ தீசனுக்கு உங்களைப்போல் நகைச்சுவை ஆசிரியராக நான் எப்போது வரலாம். இதற்குவழி

பொலீஸ் பிரச்சினைகள், வீண் வம்புகள், தேவையற்ற எதிர்ப்புகள் தோன்றும். இதெல்லாம் சமாளிக்கத் தெரிந்தால் சரி...
நீர் றெடியா?

சி. சேந்திரபாலன் நவமணி பவனம், வதிரி கரவெட்டி

✳ தீசனுரே உங்கள் திருமணம் எப்போ?

எண்பதில் (80)
(அதாவது 1980)

இன்றைய நாகரீக உலகிலே ஆணுக்கா பெண்ணுக்கா மதிப்பு அதிகம்

முதலில் ஆணுக்கு. பின்னர் பெண்ணுக்கு.

கே. தவேந்திரி 235, பாண்டியன்குளம்

✳ உலகில் ஆணகப் பிறப்பது பாவமா? பெண்ணுகப் பிறப்பது பாவமா?

உலகில் பிறப்பதே பாவம் போல் தெரிகிறது இதில் ஆண் வேறு பெண் வேரு?

---

எம்.எஸ். நாதர் முத்துசிருப்பர் ஒழுங்கை சுன்னுகம்

✳ 1ம் பரிசு ✳

✳ மனிதத் தன்மை, தெய்வத் தன்மை, மிருகத் தன்மை இதுபற்றி உமது கருத்து?

வீட்டுக்கு வீடு வோட் கேட்டது மனித தன்மை அதற்கு இரங்கி வோட் போடுவது தெய்வத் தன்மை. லெக்சனில் வென்றபின் அதிகாரவெறியில் நடப்பது மிருகத் தன்மை

---

இரா இலங்கேஸ்வரி பொன்னையா லேன் கொக்குவில் மேற்கு

✳ மிஸ்டர் தீசன் காதலித்து கைவிடும் ஆண்களைப் பற்றி தங்கள் கருத்து...

மிஸ் இலங்கேஸ் திருமணம் முடித்துகைவிடுவதை விட இது எவ்வளாவா பெற்றர். (இனி என்ன செய்வது உனக்கு எனது அனுதாபங்கள் )

---

✳ பெரியோரின் அறிவுரை வழுக்கும் இடத்திற்கோர் ஊன்றுகோலாகும் ✳

ஆர். அருள்ராஜ் முத்து 394. மெயின் வீதி, பசறை

தீசனரே, நான் எனது நண்பருடன் நெருங்கி பழகினல் அவர் விலகி செல்கிருரே! காரணம். வேலே ஏதாவது பெற்று தருவதாக லஞ்சம் ஏதோ கேட்டீரோ?...

எஸ். கிருஸ்ணகுமார் உடுத்துறை தெற்கு செம்பியன்பற்று

✻ கூட்டுச்சேரா மாநாட்டிற்கு வரும் ஆபிரிக்க நண்பர்கள் உங்களேயும் தங்கள் இனத்தவர் என நினைத்து நெருங்கி பழகினல்?

அவர்களாவது என்னை தம்மினம் என ஒத்துக் கொள்கிருர்களே.
(விரட்டியடிக்காவிட்டால் போதும்)

செல்வி மாலா சிவானந்தம் கோப்பாய் தெற்கு, கோப்பாய்

✻ தீசன் அண்ண பெண்களே அதிகமாக வெறுக்கிருயே தற்செயலாக என்னை ஒரு பெண் காதலித்தால் ?

அந்த அப்பாவிப் பெண்ணுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்

வேலணை விஜி ✻ 3ம் பரிசு ✻

✻ தலேகுனிந்து நடக்கும் பெண்கள், சிறந்த பண்புடையவர்கள் என்று நம்முன்னேர் கூறியுள்ளனர். ஆனல் பாரதியோ நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வையும் கொண்ட பெண்களே புதுமைப் பெண்கள் என்று பாடியுள்ளார். நானும் இவற்றையே விரும்புகிறேன். தாங்கள் யாரை விரும்புகின்றீர்கள்?

நீங்கள் எப்படித்தான் நடந்தாலும் நான் விரும்பப் போவதில்லை

ஜே.பி. மருதனர்மடம்

✻ ஐயா! என் காதலியை சந்திக்க முடியவில்லேயே?

அப்பனே! கண்களிரண்டும் பாடி கவலேயை மற

எம்.பி. பாலச்சந்திரன் 423, மெயின் வீதி, பசறை

✻ தீசனரே காதலனு காதலியா முதலில் காதல் கடிதம் எழுதவேண்டும்?

சந்திரா பறவாயில்லே. நீரே முதலில் எழுதும். திருமணத்தின்போது யார் யாருக்கு தாலி கட்டுவதென கேட்பீரோ...

இரா மனேகரன் சுதுமலை தெற்கு, ஆனைக்கோட்

✻ பெண்கள் கற்பை காப்பாற்றவேண்டும் என்கிருர்களே. ஆண்களுக்கு அப்படியில்லேயே!

யார் சொன்னது கற்பு இழந்த கோவலன் பட்ட பாடு தெரியாதா?

(ஆண் ஒருவரை மணந்தால் தான் கற்பு)

நீரும் உமது கற்பை காப்பாற்றிக்கொள்ளும்

நூர் றெஹானு கல்முனை 3

✻ சில வாலிபர்கள் பெண்களேப்போலவே உடை உடுத்துக்கொள்ள விரும்புகிருர்களே இதுபற்றி... ஆண்களேப்போல பெண்கள் உடையணியும்போது ஆண்கள் விரும்புவதில் என்ன தப்பு...?

திருமண வைபவங்கள்,
பிறந்தநாள் விழாக்கள்
என்றும் உங்கள் மனதைவிட்டகலாத நிகழ்ச்சிகள்
இவற்றை ஞாபகத்தில் வைத்திருக்க
✻ சிறந்த புகைப்படங்கள் பிடிப்பதற்கு
சற்குணலிங்கம்
வெளிப்புற படப்பிடிப்பாளர்
35, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

கே. சூரியகுமார் 232, பாண்டியன் குளம்

✻ தலேமுடியை நீளமாக வளர்க்கும் ஆண்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

எப்படியாவது வளர்த்துவிட்டு போகட்டும் ஆனல் யாருடனுவது வம்பை வளர்க்காட்டால் போதும்

ஏ.எஸ்.ஆர்.பாபு நாரந்தனை தெற்கு

✻ பெண்களின அன்பு எப்படிப் பட்டது தீசனரே! எத்தனையோ மேதைகள் விடை காணுத கேள்விகள் என்னிடம் கேட்கிறீரே!

ஆனல் அவர்கள் 'வம்பு' எப்படியென்று கேளும் பக்கம் பக்கமாக கூறலாம்.

சைக்கிளில் சென்ருல் பின்னல் துரத்தி துரத்தி கிண்டல் பண்ணுகிருர்களே!

✻ நீர் அரசியலில் இறங்கமாட்டீரா?

எனக்கு ஒழுங்கான பிழைப்புக்கள் பல இருக்கின்றன

செல்வி சா. தனலட்சுமி மீசாலை வடக்கு

✻ 2ம் பரிசு ✻

✻ சீதனம் என்கிற பெயரால் பெண்களிடம் தங்களே விற்கும் ஆண்களின் முட்டாள் தனத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பெற்ருேர் விலேபேசி வாங்கும் வரை ஆண்கள் விலே கூடிக்கொண்டே போகும்

அடுத்த மாத
கேள்வி பதில்

பரிசுப் பணம்
20/- 15/- 10/-

வழங்குபவர்கள்:

உதவாத கேள்விகள்
"கலகலப்பு"
இணுவில்.
இதனை வெட்டி ஒட்டுக.

உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்
அம்பாள் றேடிங் கொம்பனி
78, 4-ம் குறுக்குத்தெரு, — கொழும்பு-11

## கடந்த இதழில் கனகம்மா கவர்ச்சி போதனு நிலையம்பற்றி பிரசுரித்திருந்தோம் பலர் வேலை கேட்டு விண்ணப்பித்தனர் எனவே.....

# கனகம்மா கவர்ச்சி போதனு நிலையத்தில் ஆசிரியர்கள் பதவிக்கான விண்ணப்பம்

1. பெயர் :

   (A) காதலர்/காதலி செல்லமாக அழைப்பது :

   ……………………………

   (B) பட்டப் பெயர் :…………………………

2. பெற்ரேருக்கு தெரியாமல் கடிதம் எழுதும் முகவரி:…………………………………

   ……………………………

3. நிரந்தர காதலரின் பெயரும், முகவரியும் : …..
4. கடைசியாகப் படித்து பெயில்விட்ட ரியூட்டரியின் பெயர்கள் (வரிசைக் கிரமத்தில்) ……….
5. ரியூட்டரியில் படித்த காலத்தில் தாங்கள் விரும்பி யணிந்த உடைகள் : (பெல்ஸ்/மினி/மக்ஸி வேட்டி) … ……………………
6. அங்கு படித்த காலத்தில் தங்கலால் அடிவாங்கிய ஆசிரியரின் பெயர்…………………………
7. காதலர் இருக்கிருரா /வேறுமணம் செய்துவிட்டாரா?…………………
8. பிறந்த திகதி ………. நட்சத்திரம் …………. கூப்பன் இலக்கம்:….. ……..
9. ஆணு/பெண்ணு :… ……………

   (இரண்டு வயதில் ஆண்/பெண் என்று நிரூபிக்கக் கூடிய அத்தாட்சிப் பத்திரம் இணைக்கவும்)

10. காதலர்களின் எண்ணிக்கை: ………..
11. காதல் கடிதங்களின் தொகை: …… எண்ணிக்கை : …. நிறை: இரு… . … அவு………
12. இறுதியாகப் பெறப்பட்ட காதல் கடித விபரம் (பிரதி ஒன்று இணைக்கவும்) … …
13. காதலருடன்/காதலியுடன் கடைசியாகப் பார்த்த படத்தின் பெயர் : …….. …… ……
14. காதலர்/காதலியிடம் உள்ள விசேட அம்சங்கள் தகைமைகள் : ………………………
15. காதலர் / காதலியினுல் கைவிடப்பட்டிருந்தால் அதற்குரிய காரணம் …….. …………..
16. காதலரால் அன்பளிப்பு செய்யப்பட்டவை விபரம் (முத்தம் தவிர) …………………
17. காதலர்/காதலியை நினைத்துப்பாடும் சினிமாப் பாடல் (சோகம்/சந்தோஷம்) … … …………
18. 'கண்களிரண்டும்' பாடல் விரும்பக் காரணம்:

    …………………………… ……
19. கனகம்மா கவர்ச்சி போதனு நிலையத்தின் தராதரப்பத்திர விபரம் :- (பிரதி இணைக்கவும்)
20. க. பொ. த. தராதரப் பரீட்சையில் தாங்கள் இதுவரை தொகையாகப் பெற்றுக்கொண்ட பாட. விபரங்கள், சித்திகள் : …. …. ……… பெயில்விட்ட எண்ணிக்கை : … ……..

மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் என் காதலர் / காதலியின் மீதாணை உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். மேலும் நான் காதலர்/காதலியால் கைவிடப்படவில்லை அல்லது அனுதாபத்துக்குரியவராகவில்லை என்று கூறி இதன் கீழ் கையொப்பமிடுகின்றேன்.

……………………………… ………………………………

திகதி கையொப்பம்

காதலர் பேரவை பிரதிநிதிகளிடம்
லஞ்சம் கொடுக்க முற்படுவோர்
கடுமையாக தண்டிக்கப்படுவர்
வாங்குபவர் மன்னிக்கப்படுவர்.

நாடுவோர் குறையை தீர்க்கும்
நல்லயில் கந்தா போற்றி
★ மற்ரு பேணிச்சர் ★
MATRA FURNITURE
சிறந்த தேக்கு, முதிரைகளில் கண்ணுடி மேசைகள், அலுமாரிகள், ஸ்பிறிங் பதிக்கப்பெற்ற தரமான குசன் கதிரைகள் பெற்றிட
சிறந்த ஸ்தாபனம் தான்
மற்ரு பேணிச்சர்
நவீன வீட்டுத்தளபாட விற்பனையாளர்
87, 137, கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்

# சிவனுடன் ல மணி நேரம்

* பக்தரென்று பெயரெடுக்க பஜனை பாடுகிருர்கள்?
* உலகில் 3/2 பங்கு நீர் ஆனுல் கொழும்பில் 3/1 பங்கு கூட இல்லையே!
* உம்மை 'பித்தா' என சொன்னதில் தவறில்லையே...
* அரசியல் சார்பு எம்.பிக்களின் தொண்டர்கள் ருத்திரதாண்டவத்தைவிட மேலாக ஆடுகிருர்களே.

ஆகஸ்ட் முதலாந்திகதி நல்லூர் கொடியேற்றம் பார்ப்பதற்காக, ஞேட்மாஸ்டர் சைக்கிளில் சென்று கொண்டிருந்தேன். கந்தர் மடத்தடியில் என் பின்னுல் யாரோ விசிலடிக்கும் சத்தம்திரும்பிப் பார்க்காமலே சென்றேன். ஏனென்ருல் சில கல்லூரி மாணவிகள் சைக்கிளில் என்பின்னுல் வந்து என்னை கிண்டல் கேலி செய்வதுமுண்டு அதில் இது ஒரு ரகம் என நினைத்து சென்றுகொண்டிருந்தேன்.

குட் ஆவர் நூன் தீசா என்றவாறு தோழில் ஒரு கை வந்து விழுந்தது. அது வேறுயாருமல்ல சாட்சாத் சிவனே! தான் (சிவபூஜைக்குள் கரடி புகுந்ததுபோல )என்ன சிவனே பக்தர்களெல்லாம் உங்களைத் தரிசிக்க கோவிலுக்கு போகிருர்கள் நீங்கள் இங்கு நிற்கிறீர்களே! அங்கு சனமே இல்லை தீசா! ஓ! இப்ப கதிர்காமத்திற்கு அநேக பக்தர்கள் சென்று விட்டனர் நீங்களும் உங்கள் பிள்ளைகளும் பல இளைகள் அமைத்து சிவன் கோவில், பிள்ளையார் கோவில், கந்தசுவாமி கோவில்

ஆங்காங்கே திருவிழாக்கள் பக்தர்கள் என்ன செய்வார்கள் இங்கு ஆங்கென்று அலைகிருர்கள் ரெயினில், பஸ்ஸில் தூங்கி வழிந்து கொண்டு அவர்கள் படும்பாடு உங்களுக்கு என்ன தெரியும். நல்லூரில் திருவிழா, கதிர்காமம் திருவிழா, கொழும்பில் வேல்விழா பக்தர்கள் என்ன செய்வார்கள். கொழும்பில் கூட எனக்கு அதிக பக்தர்கள் எனது மகிமை எப்படி தீசா, வீதியெல்லாம் நன்ருக அலங்கரித்திருக்கிருர்களே! பார்த்தாயா தீசா.

ஐயோ பாவம்

யார் தீசா!

நீங்கள் தான்.

ஏன்......?

கூட்டுச்சேரா மகாநாட்டிற்காக அவர்கள் வர்ணங்கள் அடித்து சிறபபிற்கிருர்கள் நீங்களும் ஏதோ ...... அரிசிப் பொரியோடு திருவாரூர் என்பதுபோல

மாநாட்டு அலங்காரத்துடன் உங்கள் வேல் விழாவும்... .......

வேல் விழாவிற்கு திரண்ட பக்தர்கள் எப்படி எவ்வளவு பக்தர்கள் பார்த்தாயா தீசா, பார்த்தேன் பார்த்தேன்

தமிழே பேசாத! ஆங்கில பக்தர்களை கண்டேன் கண்டேன்

ஏன் " **VEL FESTIVAL** " என பம்பலபிட்டியில் உள்ள கோயிலில் ஆங்கிலத்திலேயே எழுதி விட்டார்கள்.

சுந்தரமூர்த்தி நாயனுரை சுந்தரத் தமிழில் "பித்தாப்பிறை" சூடி என பாடச் சொன்னுர்களாமே! பித்தா என அவர் கூறியது சரி ஆங்கிலத்தில் கிட்டத்தட்ட **FOOL** இனி பாடல்களைக் கூட ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விடுவார்கள்.

தமிழ் பக்தர்களை விட சிங்களப்பக்கர்கள் தான் உங்களுக்கு கூட சிவனே!

பஸ்ஸிற்கு காவல் நின்றபொழுது ஒரு குடும்பத்தினர் என்பக்கத்தில் நின்றனர். விபூதி சந்தண குங்குமம் அணிந்திருந்தனர். நான் தமிழில் கதைத்தேன். ஆனுல் அவர்கள் சிங்கள நண்பர்கள் என பின்னர்தான் தெரிந்தது. ஏன் விபூதி சந்தனம் அணிந்தீர்கள் என கேட்டேன். அநேகம்பேர் அணிந்துள்ளனர் நாங்களும் அணிந்தோம் இதில் கெடுதல் ஒன்றும் இல்லையே என ஆங்கிலத்தில் பதிலளித்தார் அந்த குடும்பத்தலைவன்.

சிவனே! எப்படிக் காலம்
எல்லாம் வெளிமயக்கமே இறைவக கச்சியேகம்பரனே எனப் பாடியவருக்கு ஒரு சபாஷ் சிவனே!

"சாசா... சா.. காலமே கெட்டுப் போய்விட்டது தீசா!

உங்களுக்கு இபபோதான் தெரியுமா சிவனே!

இன்றைய பக்தர்களுக்கு தேவார திருவாசகங்கள் ஒழுங்காகத் தெரியாது.
பக்தர் என்று பெயரெடுக்க பஜனை பாடுகிருர்கள் சிவனே

தேவாரம் பாடுபவனெல்லாம் பக்தனு சிவனே!

வெளுத்ததெல்லாம் பாலா

கள்ளுக்கூட வெள்ளைதான் சிவனே!

அபச்சாரம்.. அபச்சாரம்

சிவனே! சிறுவயதிலே நீங்கள் பல அற்புதங்கள் செய்ததாக படித்துள்ளேன் பக்கம் பக்கமாகப் படித்தேன். இம்முறை வேல்விழாவிற்கு உங்களை பாதை மாற்றி அனுப்பிவிட்டார்களே அடிக்கொரு பொலிஸ்

விட்டார்களே! இந்தநேரங்களிலல்லவா உங்கள் அதிசயத்தைக் காட்டியிருக்க வேண்டும்.

திருவிழா பார்ததுச் சென்ற இளைஞன் சுடப்பட்டானே!

இந்த நேரங்களில் எங்கே உங்கள் அதிசயம் திறமைகள்

உங்களுக்கு இருக்கும் கொஞ்ச நஞ்ச பக்தர்களும் குறையப்போகிறார்கள் சிவனே!

தீசா என்னைப்பற்றி உனக்கு தெரியாது.

ஏன் தெரியாது சிவனே! நிறையக் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

அதையும் சொல்லவா?......

இல்லை ..... வந்து ......

என்பெருமை வெளிநாடெல்லாம் தெரியப்போகுது தீசா,

வெளிநாட்டவரெல்லாம் வேல்விழாவை படம் எடுத்து போனார்களாமே!

ஆமாம் தேங்காய் அடிப்பதையே விடாமல் படமெடுத்தார்கள். சிலர் ஏதோ வெடிகுண்டென நினைத்து ஓடியே விட்டனர்.

பக்தர்கள் குளிப்பதற்கு நீரே இல்லாமல் எவ்வளவு அவஸ்த்தைப்படுகிறார்கள் தெரியுமா?

உலகில் $\frac{2}{3}$ பங்கு நீர் என பூமிசாஸ்திர பரீட்சைக்கு நான் யாரையோ பார்த்து எழுதிய ஞாபகம்

ஆனல் கொழும்பில் 1/3 பங்கு நேரம்கூட நீர் கிடைப்பதில்லை சிவனே!

அதுசரி நல்லூரில் இரவில் சனமே இல்லையே தீசா!

சிவனே! உங்கள் பக்தர்களெல்லாம் உல்லாசப் பக்தர்கள் தானே!

பஸ் இல்லை யென்றதும் சனமே இல்லை பார்த்தீர்களா?

பனைமரத்தில்.........

தென்னைமரத்தில் நெறி போட்டதுபோல யாரோ பஸ் கொழுத்த யாரையோ பொலிசார் சுட்டனராம்.

"ஆறுதலை அளிப்பதற்கு ஆறுதலை இருக்கையிலே
ஐந்துதலை ஒழித்திடுவாய் மனமே"

என ஒருவர் பாடியுள்ளார் ஆனல் இவற்றையெல்லாம் கண்டு நீங்கள் ஒழித்து விடுகிறீர்களே!

"வாழ்க்கையே நிலையற்றது" என தத்துவ ஞானிகள் கூறியுள்ளனர் அப்படியானல் அரசியல்!...

இது தெரியாமல் தலைகால் புரியாமல் சிலர் ஆடும் ஆட்டம் உங்களுக்கு தெரியுமா சிவனே!

உங்கள் கழுத்திலுள்ள பாம்பு கருடனைப்பார்த்து சௌக்கியமா என்பதுபோல

அரசியல் வாதிகளுக்கு தொண்டர்கள் எனக் கூறி சிலர் ஆடும் ஆட்டம் உங்கள் உருத்திரா தாண்டவத்தை விட கூடுதலாக இருக்கிறது சிவனே!

என்னையெல்லாம் சிலர் முதுகில் தட்டிப் பாராட்டுகிறார்கள் சிலர் நெஞ்சில் தள்ளி வெருட்டிப் பார்க்கின்றனர்.

உந்த சலசலப்பிற்கெல்லாம் இந்த கலகலப்பு அஞ்சமாட்டாது.

சிவனே இன்னும் 7, 8 மாதங்கள் பொறுத்துப் பார்ப்போம் சிவனே!

ஏன் தீசா 7, 8 மாதம் நான் உங்களுடன் அரசியல் கதைக்க விரும்பவில்லை சிவேனே!

தீசா

பார்த்தாயா சூழலெல்லாம் பச்சைப் பசேலென்று இருக்கே

சிவனே மீண்டும் அரசியலே பேசுகிறீர்களே அரசியலா?

ஆம் இப்போ பச்சை... என்று சொன்னீர்கள் பச்சையென்றாலே அரசியல் தான் கவனம். உங்கள் உயிருக்கே ஆபத்துவரும் தீசா...... குட்பை சிவனே மீண்டும் தேரிலன்று சந்திப்போம்.

## ஒளி விழக்கு

**எஜமான்:** என்னடா! மணி ஆறுகவில்லை இப்பவே சைக்கிளுக்கு லைட் போட்டுக் கொண்டு வாறாய்!

**வேலையாள்:** என்னையா? நேற்று 5 மணிக்கே ஒரு பொலிஸ்காரன் எங்கடை ரவியைப் பிச்சு 'எங்கையடா லைட்' என்டு கேட்டு அடிச்சானே...

**எஜமகன்:** ஓ! அதுவா! அது அவன் ரவுடி அந்தப் பொலீஸ்காரன்ரை லைட்டை களவாக் கழட்டிக் கொண்டு வந்துவிட்டானும்! அது தான்..

T. யோகராசா,
(குடியிருப்பு, வவுனியா)


**காதலி:** அத்தான்! என் அழகில் மெய்மறந்து விட்டீர்கள் போல.

**காதலன்:** இல்லையப்பா! நீர் போட்டிருக்கும் பவுடரின் மணம் என்னை மெய்மறக்கச் செய்து விட்டது!

ரியோலர்ஸ் ரால்கம் பவுடர்
TRIOLARS TALCUM POWDER
நியூ குனேகா பவுடர்
NEW GUNEICA TALCUM POWDER

சிறந்த வெண்மைக்கு
※ பென் குயின் நீலம் ※

விநியோகஸ்தர்கள்: J. M. டொமினியன்
ரொட்டிக்கோ அன் கோ:
170, மலிபன் வீதி, கொழும்பு–11

தொலை பேசி: 276

# லேற் மெயில்
# LATE MAIL

★ கரம்பொன் வினோபாஜி இளம்விவசாயிகள் கழக கதம்பவிழாவும் பொருட்காட்சியும் 28–8–76ல் கரம்பொன் புஸ்பமகளிர் கல்லூரியில் கழகத் தலைவி மாசிலா சூசைப்பிள்ளையின் தலைமையில் நடைபெறும்.

★ யாழ் இளம் விவசாயிகள் ஒன்றியமும், லியோ கழகத்தினரும் இணைந்து நடாத்தும் ஒரு நாள் பயிற்சி முகாம் செப்ரெம்பர் 1–ம் வாரத்தில் நடைபெறும் சாரணரும் சில மன்றங்களும் கலந்துகொள்ளும். (விரும்புவோர் தொடர்புகொள்க)

★ கொக்குவில் திருவள்ளுவர் இ. வி. க. ஆகஸ்ட் 7ம் திகதி விவசாயிகள் கருத்தரங்கொன்றை நடாத்தினர்.

★ திருநெல்வேலி இ.வி.க. '8–வது ஆண்டுவிழா பொருட்காட்சியுடன் நடைபெற்றது. கழகதலைவி செல்வி சி. இந்திராதேவி தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில், இளம் விவசாயிகள் கழகத்தலைமைப்பீட. அதிகாரி திரு. பிறேமரத்தின, வி. போ, சி. சிறீஸ்கந்தராஜா, கமத்தொழில் விளக்க ஆசிரியர் சுந்தரானந்தன் இ. வி. க. போதனாசிரியர் சி. சிவானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். மா. வி. அதிபர் திரு. வீ. சத்தியானந்தன் குத்துவிளக்கேற்றிப் பொருட்காட்சியை திறந்து வைத்தார். (விழா மண்டபத்திற்கு அண்மையில் நல்லூர் எம். பி. அவர்களுக்கு நடைபெற்ற இராப்போசனத்திற்கு இடைஞ்சல் ஏற்படாத வகையில் இரவு நிகழ்ச்சிக்கான ஒலிபெருக்கி அனுமதி வழங்கப்படவில்லை)

★ இணுவில் ஜோதி இளம் விவசாயிகள் கழக 1976/77ம் ஆண்டிக்கான புதிய தலைவராக ச. ஜீவானந்தனும், காரியதரிசியாக சு. தேவமனோகரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

★ சுன்னாகம் வடக்கு ஜனசக்தி இ. வி. க. அருகுள்ள ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

★ பண்டத்தரிப்பு ப. நோ. கூட்டுறவுச்சங்க பொருட்காட்சியில், பண்டத்தரிப்பு, சித்தன்கேணி, சுளிபுரம் இ. வி. கழகங்கள் பொருட்களை வைத்தனர். வட்டு எம். பி. திரு ஆர். தியாகராசா அவர்கள் பொருட்காட்சியினை பாராட்டி பேசினார்.

★ பல சேவைகளை செய்து வரும் யாழ் ரொட்டரி சங்கம் அண்மையில் Dr. பாரதியின் வைத்திய சாலையில் இலவச பல் வைத்திய சிகிச்சை அளித்தனர். யாழ் கைதடி வயோதிப இல்ல வாசிகள் பலர் சிகிச்சை பெற்றனர்.

— தகவல் – டோ —



# ராசி பலன்

## வாசகர் நலன் கருதி

கணித்தவர் — டோ

★ **மகரம்:**– மெற்னிஷோ பார்க்க விரும்புகிறாய், பஸ்சேவை ஒழுங்கில்லை ஜாக்கிரதை.

★ **கும்பம்:**– அட்வான்ஸ்லெவல் பெயிலென்று கவலைப்படாதே அடுத்தவருடம் சித்தியடைவாய்.

★ **மீனம்:**– கல்லூரி மாணவிகள் சைக்கிளில் துரத்துவார்கள் கவனமாக இருக்கவும்.

★ **மேடம்:**- கிலிட் நகை அணிந்து திருவிழாவுக்குப் போகாதர் திருடர்கள் பாவம்.

★ **விருச்சிகம்:**- தபால் ஸ்ரைக் காதல் கடிதம் வராது.

★ **மிதுனம்:**- பரீட்சை கிட்டுகிறது கவனமாகப் படி சினிமா பார்ப்பதை குறை.

★ **கடகம்:**- ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளாய். வேலைபெற்றுத் தருவதாக 5000 கேட்பார்கள் (டுப்பர்களிடம்) எச்சரிக்கையாக இருக்கவும்.

★ **சிம்மம்:**- அடுத்த குழந்தை சோடியாக பிறக்கும் உடனே குடும்பக்கட்டுப்பாடு செய்துகொள்.

மீதிராசிக் காரர்களுக்கு அறிவு வளராது ஏனென்றால் நீங்கள் கலகலப்பு படிக்கிறீர்கள்.

---

**நீதிபதி :** காலம் சென்ற உன் ஏஜமானுக்கு பாலுக்குள் நஞ்சு கலந்து கொடுத்தது உண்மை தானே.

**வேலைக்காரன் :** ஆம்

**நீதிபதி :** நஞ்சு கலந்த பாலைக் குடிக்கும் போது உன் மனம் திடுக்கிட வில்லையா ?—

**வேலைக்காரன் :** இல்லை—பால் சுவையாக இருக்கிறது இன்னும் ஒரு கப் பால் கொண்டு வரும்படி கேட்டபோது தான் என் மனம் திடுக்கிட்டது.

நவிண்டில் கே. பரமசிவம்

உங்கள் சிங்காரத் தோற்றத்திற்கு சிறந்த
சிகையலங்காரம் செய்ய நாடுங்கள்
★ நியூ லிங்கம் சலூன் ★
கே. கே. எஸ். வீதி, இணுவில்,

ஆடும் மயிலோடு,
அழகான தேரூர்ந்து
நாடும் நல்லவர்கள்
நற்றமிழால் போற்ற
ஓடும் துயரங்கள்
உன் பெயருரைத்தால்,
தேடும் வினைகளாம்
தான் தீர்த்து வைப்பாய் !
அன்றும் ! இன்றும் ! என்றும்
சவர்க்காரத் தயாரிப்பில் மிகவும்
பிரசித்தி பெற்று பல்லாயிரக் கணக்கான
குடும்ப பெண்களால் பாராட்டப்படும்
தயாரிப்புக்கள்
மில்க்வைற் தயாரிப்புக்களே !

★ நீல சோப்
★ பார் சோப்
★ சலவைப் பவுடர்

**மில்க் வைற் தொழிலகம்**
77, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7233

கலகலப்பு வளர்க !
**வாழ்த்துக்கள்**
அன்பளிப்பு
"கலகலப்பு ரசிகர்"

தேரேறி திருவீதி
தானுரும் முருகா !
பாரோர்கள் போற்றிடவே
பெருவாழ்வு தருவாய் !

★ **மலைமகள் அன் கோ** ★
(உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்)
174, 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11
ரெலிபோன்: 32464

100-வது நாளைத் தாண்டி பலரை
தொடர வைக்கிருள் "சுஜாதா"
யாழ் ராணியில்
**அவள் ஒரு தொடர் கதை**

நற்கதி காட்டும் நல்லூர் கந்தா !
பொற்பதம் பணிந்தோம்
பேரருள் காட்டு !

★ **கொழும்பு ரேடிங் கொம்பனி** ★
**Colombo Trading Company**
(கமிசன் ஏஜண்ட்)
உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்கள்
98, 100, 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11
தொலைபேசி: 26739

''மயிலேறும் வடிவேலன்
விளையாடல் கோடி,
பாவங்கள் திர்த்திடுவீர்
அவன் தனையே நாடி''

விவசாயிகளே !
உங்கள், தண்ணீரிறைக்கும் இயந்திர
உதிரிப் பாகங்கள், மற்றும்
ஸ்கூட்டர் உதிரிப்பாகங்களுக்கும்
நாடுங்கள்

**வசந்தாஸ் மோட்டார் மா(ர்)ட்**
**Vasanthas Motor Mart**
N. M. W. கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வேலெடுத்து வினை தீர்க்கும் நாயகனே ! கந்தா !
வினையகல, எம் தனக்கு நற்கதி நீ தா !

**பீப்பிள் ரேட்ஸ் அன் சப்ளைஸ்**
**PEOPLES' TRADES & SUPPLIES**
உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்
(கமிஷன் ஏஜெண்ட்)
143, மலிபன் வீதி T. P. 25389
112. 4ம் குறுக்குத் தெரு T. P. 2350?
கொழும்பு-11

நடிடுவார் நற் கருணை
நல்கிவிடும் கந்தா
தீவினைகள் ஓடிவிட
நல்ல வரம் நீ தா !

**நல்லூர் ட்ரேடர்ஸ்**
(கமிஷன் ஏஜென்ட்)
49, 4-ம் குறுக்குத்தெரு,
கொழும்பு-11
ரெலிபோன் : 33991

புடவைத் தினுசுகளும்
ரெடிமேட்
துணி வகைகளுக்கும்

**ஸ்ரீ வரதாஸ்**
**புடவை மாளிகை**
**SRI VARATHAS TEXTILES**
155, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7635


நண்பனுக்கு நன்மைசெய் அவனை இழக்காதிருக்க
பகைவனுக்கு நன்மைசெய் அவனை நண்பனுக்க

Regd. at G.P.O. தலைமைத் தபால் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது    KALAKALAPPU Monthly Cartoon Magazine (Aug.Sep. 1976)

தேர் ஏறி தானூர்ந்து பார் சிறக்க வெளிவரும்
வடிவேலனை நாடுவோம் குடிவாழ வேண்டிடுவோம்.

# அம்பாள் ரேடிங் கொம்பனி
# AMBAL TRADING COMPANY

உள்ளூர் உற்பத்தி பொருள் விற்பனையில்
பல வருட அனுபவம் பெற்றவர்கள்

( கமிஷன் ஏஜென்ட் )

78, 4ம் குறுக்குத்தெரு,    கொழும்பு 11.

தொலைபேசி: 29374

"You are Proud to be Farmers
But we are Proud to Serve you"

பக்தர்கள் குறைதீர்க்கும் பரம்பொருளே கந்தா
எல்லோருக்கும் அருள்புரிந்து நல்புனேயே தாராய்

விவசாயியின் வளர்ச்சியே நாட்டின் உயர்ச்சி

# எஸ்.பி.என். அன் கொம்பனி
# S. P. N. & COMPANY

( கமிஷன் ஏஜென்ட் )

உள்ளூர் உற்பத்திப்பொருள்
விற்பனையாளர்கள்

181/185, கெஸியர் வீதி,    கொழும்பு 11.

போன் : 20615

நல்லவர்க்கு நல்லவனும் நல்லூரிற் கந்தனவன்
இனியவனின் திருநாளில் இயம்பிடுவோம் நல்வாழ்த்து—

# ★ சுபாஸ் கபே ★
# SUBAS CAFE

சுத்தமான சுவையான அறுசுவை உணவுவகைகள்
தித்திப்பு குன்றாத பல்சுவை நிரம்பிய ஐஸ்கிறீம் வகைகள் சுவைத்திட
வெளியூர் உல்லாசப் பயணிகள், நண்பர்களை மகிழ்விக்க
(குளிரூட்டப்பட்டது) — நாடுங்கள் — (Fully Air Condition)

சுபாஸ் கபே
176, ஆஸ்பத்திரி வீதி,    யாழ்ப்பாணம்.
போன் : 576

*With the best Compliments from*

# AKRAM EXPORT AGENCY
(Exporters of Sri Lanka Products)

&

# MADANI TRADING CO.
(Dealers in Textiles & Hosiery)

176, Keyzar St.    COLOMBO 11

Telephone :
29678
29436

Cable :
"AKPANWALA",
"MAHFOOZ"

இப்பத்திரிகை 68, சுந்தரபவனம், இணுவில் கிழக்கைச் சேர்ந்த இதன் உரிமையாளரும் ஆசிரியருமான (எஸ். கே. தீசன்) சீ. கேதீஸ்வரன் என்பவரால் யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவு அச்சகத்தில் பதிப்பித்து ஆகஸ்ட் 25ல் வெளியிடப்பெற்றது. J. 477